**செய்தி வெளியீடு** **நாள் : 29.11.2025**

**வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் ரூபாய் 46.50 கோடி நிதி பங்களிப்புடன் கட்டப்பட்டு வரும் திருவெற்றியூர் அரசு தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் அரசு தொழில் பயிற்சி நிலையத்தின் முன்னேற்றப் பணிகளை**
**மாண்புமிகு அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் நேரில் ஆய்வு**

********

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்** நல்வழிகாட்டுதலின்படி இன்று (29.11.2025) வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் ரூபாய் 46.50 கோடி நிதி பங்களிப்புடன் கட்டப்பட்டு வரும் திருவெற்றியூர் சட்டமன்றத் தொகுதியில் உள்ள **திருவெற்றியூர் அரசு தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் அரசு தொழில் பயிற்சி நிலையத்தின்** முன்னேற்றப் பணிகளை மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான **திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள்** நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து பணிகளை விரைந்து முடித்திட ஒப்பந்ததாரர் மற்றும் அலுவலர்களை அறிவுறுத்தினார்.

**மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்ததாவது:**

வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ், **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்** வழங்கிய அறிவுறுத்தலின்படி, மாவட்டச் செயலர் திரு.சுதர்சனம் அவர்களின் கோரிக்கையை ஏற்று, நமது சட்டமன்ற உறுப்பினர் திரு. கே.பி. சங்கர் அவர்கள் தொடர்ந்து மேற்கொண்ட முயற்சியின் பலனாக, மண்டலக்குழுத் தலைவர் அவர்கள் முன்வைத்த வேண்டுகோளை ஏற்று, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் வாயிலாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதை மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறேன்.

இந்த திட்டத்தின் அடிப்படையில் **ரூ.46 கோடி செலவில் திருவெற்றியூரில் ஒரு தொழிற்பயிற்சி நிலையமும் (ஐ.டி.ஐ), ஒரு தொழில்நுட்பக் கல்லூரியும்** அமைக்கும் பணிகள் விரைவாக நடைபெற்று வருகின்றன. தற்காலிகமாகப் பல்வேறு கல்விக் கட்டிடங்களில் பயின்றுவரும் மாணவச் செல்வங்கள், இந்த புதிய கட்டடங்கள் முடிந்தவுடன் அங்கேயே நிலையான கல்வியைப் பெறுவர்.

இக்கட்டுமானப் பணிகள் தொடர்பாக 2026 பிப்ரவரி மாத இறுதிக்குள் முழுமையாக நிறைவு பெறும் வகையில் காலக்கெடு வரையறுக்கப்பட்டுள்ளது. ஒப்பந்தப் பணியாளர்களை கூட்டி பேசி, பணியின் வேகத்தை அதிகரிக்கத் தேவையான வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் உறுப்பினர் செயலர், தலைமைப் பொறியாளர் மற்றும் உயர்கல்வித் துறையின் பொறியாளர்கள் ஆகியோர் இணைந்து கட்டிடத்தின் வலிமை, தரம், முடியும் நாள் ஆகியவற்றை நேரடியாக ஆய்வு செய்து வருகின்றனர்.

**இதன் மூலம் திருவொற்றியூர், ஆர். கே. நகர், மாதவரம் போன்ற பகுதிகளில் வசிக்கும் வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ள மாணவ, மாணவிகளுக்கு மிகப்பெரிய கல்வி வாய்ப்பு உருவாகும் என்பது நிச்சயம்.**

**வரும் கல்வியாண்டுக்குள் மாணவர்கள் மாற்றப்படுவார்களா?**

நிச்சயமாக. இந்த கல்வியாண்டிற்குள்ளேயே கட்டடப் பணிகள் முழுமையடைந்து, மாணவச் செல்வங்கள் நிலையான, பாதுகாப்பான, அனைத்து வசதிகளுடனான புதிய கல்விக் கட்டிடத்தில் பயிலும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**நூலகங்கள் மற்றும் 'முதல்வர் படைப்பகம்' நிலை**

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் நூலகங்களும், 'முதல்வர் படைப்பகம்' உருவாக்கும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இதுவரை மூன்று முதல்வர் படைப்பகங்கள் மற்றும் நூலகங்கள் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டிற்குள் மொத்தம் 10 நூலகங்களை ஏற்படுத்தும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. 2026 பிப்ரவரி மாதத்திற்குள் மேற்கொண்ட **'முதல்வர் படைப்பகம்'** பணிகளில் 70 சதவீதத்திற்கும் மேலான பகுதி நிறைவடையும். **இத்திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கற்பனைத் திட்டமாக உருவானது.**

ஆர். கே. நகரில் இரண்டு இடங்களில் 'முதல்வர் படைப்பகம்' , கொளத்தூரில் நூலகத்துடன் இணைந்த படைப்பகம்', உயர்நிலைத் தேர்வுகளுக்கான (ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். போன்ற) பயிற்சி மையம் என்பன வெற்றிகரமாக இயங்கி வருகின்றன. நாள்தோறும் 450 மாணவர்கள் இப்படைப்பகத்தில் படித்து வருகின்றனர். வீட்டிலேயே படிப்பதற்கான அமைப்பு இல்லாத மாணவர்களுக்கு இது அரிய கல்வி வாய்ப்பாக அமைந்துள்ளது. உயர்நிலைத் தேர்வுகளுக்கான பயிற்சியில் 120 மாணவர்கள் இரண்டு தவணைகளாகப் பயின்று வருகின்றனர்.

எங்கள் துறையின் செயலாளர் திருமதி.காகர்லா உஷா அவர்கள், உறுப்பினர் செயலாளர் திரு.பிரகாஷ் அவர்கள், தலைமைப் பொறியாளர் ஆகியோர் தினமும் களத்தில் இறங்கி இந்தப் பணிகள் அனைத்தையும் ஆராய்ந்து வருகின்றனர்.

இந்த ஆய்வின்போது திருவெற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. கே.பி. சங்கர், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., தொழில்நுட்பக் கல்வி இயக்கக ஆணையர் திருமதி.ஜெ. இன்னசென்ட் திவ்யா, இ.ஆ.ப., மண்டலக் குழுத்தலைவர் திரு. தனியரசு, சிஎம்டிஏ தலைமை பொறியாளர் திரு.மகாவிஷ்ணு, தொழில்நுட்பக் கல்வி இயக்கக உதவி இயக்குநர் (திட்டம்) திருமதி.சியாமளா, செயற்பொறியாளர் திருமதி.துர்கா, சிஎம்டிஏ மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உடனிருந்தனர்.

Verified RealEstate™